# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மேட்டூர் நகராட்சி

நிகழும் குரோதி வருடம் ஐப்பசி மாதம் 21ம் தேதி ஆங்கில ஆண்டு **07.11.2024ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு** மேட்டூர் நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாள் :28.10.2024 நகர்மன்ற தலைவர்
இடம் :மேட்டூர் அணை மேட்டூர் நகராட்சி

**மன்ற பொருள்**

1. 12–வது சாதாரண திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்பு குழுவின் கூட்டத்தில் (12th Metting of the Common Project Sanctioning and Monitoring Committee) கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024–2025 ஆம் ஆண்டு கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு எண்.12–ல் புதிய பேருந்து நிலையம் அருகில் நவீன வணிக வளாகம் கட்டமைக்கும் பணிக்கு (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மானிய பங்கு தொகைரூ.176.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகைரூ.177.00 இலட்சம்) என ஆகமொத்த மதிப்பீட்டு தொகை ரூ.353.00/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

   மேற்படி நவீன வணிக வளாகம் கட்டமைக்கும் பணிக்கான கட்டிட அனுமதி பெறவேண்டியுள்ளதால் அவ்வாறாக அப்பணியினை நகராட்சி பதிவு பெற்ற கட்டிட வரைபட பொறியாளர்(Linces Building Surveyor) கொண்டு ஆன்லைன் மூலமாக நகர் ஊரமைப்பு இயக்குநர் (DTCP) துறை சேலம் அவர்களிடம் விண்ணப்பித்து கட்டிட அனுமதி பெறும் பணிக்கான தோரய செலவு தொகைரூ.1.00/–இலட்சத்தில் நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3154/2023/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**
**தீர்மான எண். 591 நாள்.07.11.2024**

2. 12–வது சாதாரண திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்பு குழுவின் கூட்டத்தில் (12th Metting of the Common Project Sanctioning and Monitoring Committee) கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024–2025 ஆம் ஆண்டு கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு எண்.12–ல் புதிய பேருந்து நிலையம் அருகில் நவீன வணிக வளாகம் கட்டமைக்கும் பணிக்கு (கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மானிய பங்கு தொகைரூ.176.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகைரூ.177.00 இலட்சம்) என ஆகமொத்த மதிப்பீட்டு தொகை ரூ.353.00/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு 05.09.2024–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கு பதிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Lakshmi Construction,<br>Siva Sakthi Nagar,Kolathur Post,<br>Mettur (TK),<br>Salem-6363403 | (–) 0.003 மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s.KJSConstruction,No.08/109-1,Arasamarathu Kaadu, Semman Kodal Post, Muthunaickenpatti,<br>Omular-636304. | (+) 0.05 மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் பதிவுசெய்யலாம்.

**(ந.க.எண்.3154/2024/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**
**தீர்மான எண். 592 நாள்.07.11.2024**

3. மேட்டூர் நகராட்சி வார்டு எண்.18ல் துக்கணாம்பட்டி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023–2024ஆம் நிதியாண்டின் கீழ் அறிவுசார் மையம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.195.00/–இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்விடத்தின் முன்புறம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பழுதடைந்த நகராட்சி பணியாளர் குடியிருப்பு (சர்வே எண். வார்டு –B, பிளாக் எண்–07, நகர புல எண்.02) கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்த வேண்டியுள்ளது.

இக்கட்டிடங்கள் 1979–க்குள் கட்டப்பட்டு 70 வருடங்களுக்கு மேலாகி உள்ளதாலும் தற்பொழுது கட்டிடம் ஸ்திரத்தன்மை இழந்து விட்டதால் அரசாணை நிலை எண்.174, நகராட்சி நிவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1)) துறை நாள்.14.12.2022ன்படி உரிய மேல் அலுவலர்கள் அனுமதிக்கு பிரேரணை அனுப்பபட்டுள்ளது. எனவே மேற்கண்ட பழுதடைந்த பழைய நகராட்சி பணியாளர் குடியிருப்புகள் (சர்வே எண். வார்டு –B, பிளாக் எண்–07, நகர புல எண்.02) இதனை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1666/2022/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**
**தீர்மான எண். 593 நாள்.07.11.2024**

4. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12–ல் புதிய பேருந்து நிலையம் அருகில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024–2025 ஆம் ஆண்டு கீழ் நவீன வணிக வளாகம் கட்டமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.353.00/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது.

இக்கட்டிடங்கள் 1947–க்குள் கட்டப்பட்டு 70 வருடங்களுக்கு மேலாகி உள்ளதாலும் தற்பொழுது கட்டிடம் ஸ்திரத்தன்மை இழந்து விட்டது. அரசாணை நிலை எண்.174, நகராட்சி நிவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1)) துறை நாள்.14.12.2022ன்படி உரிய மேல் அலுவலர்கள் அனுமதிக்கு பிரேரணை அனுப்பபட்டுள்ளது. எனவே மேற்கண்ட பழுதடைந்த நகராட்சி பணியாளர் குடியிருப்புகள் (சர்வே எண். வார்டு –A, பிளாக் எண்–45, நகர புல எண்.7,8,9) இதனை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3154/2024/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**
**தீர்மான எண். 594 நாள்.07.11.2024**

5. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ,ந.க.எண்.34638/2022/EA2-SWM-2, நாள்.10.01.2023 ஆணையின்படி, இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.2412/2021/எச்1, நாள்.09.05.2023-ல், மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான தூய்மை பணியாளர்கள், தளவாடச் சாமானங்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி நகராட்சி உரமாக்கும் மையம், மறுசுழற்சி மையம் மற்றும் கழிவுவளம் மீட்பு மையம் ஆகிய இடங்களுக்கு கொண்டு சேர்த்தல் பணிக்கு ஒருடன்னிற்கு ரூ.4004/-என்ற விலை விகிதத்தின் அடிப்படையில் 10.08.2024 முதல் 09.09.2024 முடிய ஒரு மாத கால ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய M/s.BIO GREEN MAN POWER SOLUTION என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காணும் ஒப்பந்த காலம் 09.09.2024 உடன் முடிவடைவதால் M/s.BIO GREEN MAN POWER SOLUTION என்ற நிறவனத்திற்கு 10.09.2024 முதல் 09.10.2024 முடிய ஒரு மாதங்களுக்கு ரூ.4004/-என்ற முந்தைய விலை விகிதத்திலேயே M/s.BIO GREEN MAN POWER SOLUTION என்ற நிறுவனம் பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும்மன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது .

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றுபணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.க.எண். **2412/2021/எச்1 )**
**அனுமதிக்கப்பட்டது.**
**தீர்மான எண்.595 நாள்.07.11.2024**

6. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கணினிகளில் கணக்காளர் அவர்கள் பயன்படுத்தும் கணினி பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்யவும் பழுதடைந்த பொருளை மாற்றம் செய்யும் பணிக்கான விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படியான நிறுவனங்கள் விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| நிறுவனத்தின் பெயர் | SSP INFOTECH<br>The Complete Solutions 18/151B, Dr.Subrayan nagar, Mettur dam | AnEnter prises<br>Thilagar nagar<br>Mettur dam | MR Computer<br>Ponnagar main road<br>Mettur dam |
|---|---|---|---|
| தொகை ரூ | 4000/- | 4400/- | 4300/- |

மேற்காணும விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனமான SSP INFOTECH, The Complete Solutions 18/151B, Dr.Subrayan nagar, Mettur dam அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கான செலவினத்தினை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2056/2024/பி2)**
**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 596 நாள்.07.11.2024**

7. மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் LCV வாகனம் TN93F9484 வாகனத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்கான வாகனக் காப்பீடு 10.09.2024 உடன் முடிவுற்றதால் தற்போது காப்பீட்டினை யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் நிறுவனம் மூலம் புதுப்பித்துக் கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ 20244/- யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் நிறுவத்திற்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம் .

**(ந.க.எண்.1791/2024/எச்1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.597 நாள்.07.11.2024**

8. இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண்.TN52V4660 வாகனத்தை நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தபட்டு வருகிறது. அவ்வாறு பயன்படுத்தபடும் ஈப்பு வாகனம் அடிக்கடி பழுது அடைந்து இயக்க முடியமால் நின்று விடுகிறது.இதனை நல்ல முறையில் பழுது பார்த்து ஒப்படைக்க மகேந்திரா அண்டு மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற டிலர் M/s.SKS INDIA PRIVATE LTD சர்வீஸ் செண்டர் சேலம் என்ற நிறுவனத்தின் மூலம் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள அதற்கான செலவினம் தொகை ரூ.99251/-ஐ நகராட்சி பொதுநிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3300/2024/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.598 நாள்.07.11.2024**

9. கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025 ஆம் ஆண்டு கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு எண்.12-ல் புதிய பேருந்து நிலையம் அருகில் நவீன வணிக வளாகம் கட்டமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.353.00/- இலட்சத்தில் பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு அவ்விடத்தில் அமைந்துள்ள பழுதடைந்த நகராட்சி பணியாளர் குடியிருப்பு (வில்லைவீடுகள்) கட்டிடங்களை தரைமட்டத்திற்கு இடித்து அனைத்து பொருட்கள், இடிபாடுகள் அங்கிருந்து எடுத்துச் சென்று அப்புறப்படுத்தும் பணிக்கு 24.09.2024-ல் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் விவரம் | விலை விகித பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1. | M/s.Lakshmi Construction,<br>Siva Sakthi Nagar,Kolathur Post,<br>Mettur (TK),<br>Salem-6363403 | ரூ.32000/- |
| 2. | M/s.KJSConstruction,No.08/109-1,Arasamarathu Kaadu, Semman Kodal Post, Muthunaickenpatti,<br>Omular-636304. | ரூ.30000/- |

மேற்படி பணிக்கு அதிகபட்ச தொகையான ரூ.32000/-ஐ அளித்துள்ள M/s.Lakshmi Construction என்ற நிறுவனத்தின் விலைவிகிதம் துறையின் மதிப்பீட்டை

விட அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3154/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.599 நாள்.07.11.2024**

**10.** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் திட்ட செலவினத்தின் பிரிவு கடிதம் எண்.5724/F.UGSS Mtr/JDO/PD/NKL/2024 நாள்.06.06.2024ன்படி, மேட்டூர் நகராட்சிக்கு UIDSSMT திட்டம் 2013-2014 ஆம் ஆண்டு கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் பாதாளசாக்கடை திட்டம் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.7308.74/-இலட்சத்தில் பணிமேற்கொண்டு 31.10.2019 தேதியில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்க்கு கொண்டு வரப்பட்டது. அவ்வாறாக மேற்படி STP II, STP III, திட்டப்பணி இயக்குதல் பராமரித்துல் பணியினை திட்டத்தின் ஒப்பந்தத்தின்படி பணி பயன்பாட்டில் வரப்பெற்ற நாளில் இருந்து ஐந்து ஆண்டுகள் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் மூலம் செயல்பாட்டில் இருந்து வந்தது, தற்பொழுது பராமரிப்பு பணி காலம் முடிவுற்றதால் நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பாதாளசாக்கடை திட்டத்தை STP II, STP III, நகராட்சி மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததால் தனியார் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் வெளிகொணர்வு (Privatization of Outsourcing) முறையில் பணியாட்கள் கொண்டு மூன்று மாத காலத்திற்குள் இயக்க உத்தேச செலவினம் ரூ.14.90/- இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1030/2005/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 600 நாள்.07.11.2024**

11. மேட்டூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் Clean Toilet Campaign சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் சுகாதார கூறு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26740/2024/SBM-1(1) நாள்.26.09.2024-ன் உத்தரவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| Sl.No | Name of the Work | Nos | No.of.Seats | Estimated Cost (Rs.1.5 lakh per seat) | Proposed Cost |
|---|---|---|---|---|---|
| 1. | Community Toilet -Retrofitting | 18 | 104 | 78.00 | 76.00 |
| 2. | Public Toilet- Retrofitting | 2 | 22 | 27.50 | 14.00 |

மேற்படி திட்டபணிக்கு கீழ்கண்டுள்ளபடி நிதி பயனீட்டு விவரம்:

| Sl.No | Name of the Work | Funding pattern | Proposed cost | GoI Share | State share | ULB share |
|---|---|---|---|---|---|---|
| 1. | Community Toilet -Retrofitting | 50%:33% | 76.00 | 38.00 | 25.08 | 12.92 |
| 2. | Public Toilet- Retrofitting | 50%:33% | 14.00 | 7.00 | 4.62 | 2.38 |

எனவே, மேற்காணும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவின்படி தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.3474/2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 601 நாள்.07.11.2024**

**12.** நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகம் தங்கமாபுரிபட்டிணம் மற்றும் சேலம் கேம்ப் ஆகிய இரு இடங்களில் இயங்கி வருகிறது. மேற்படி வாரச்சந்தை திறந்தவெளி கட்டிடம் வசதி இல்லாமல் உள்ளது. மேற்கண்ட இரு இடங்களில் வாரச்சந்தை பகுதிகளில் உபயோகமற்ற தரை தள கடைகள் மற்றும் இதர கடைகள் கட்ட வேண்டி பிரேரணை அனுப்பி அரசின் அனுமதி பெற வேண்டி கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை உரிய விவரங்களுடன் தயார் செய்து அனுப்ப வேண்டியுள்ளது. இதற்கு தோரயமாக ரூ.5.00/-இலட்சம் செலவு ஆகும். எனவே விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய கலந்தாலோசகர் நியமானம் செய்ய ஒப்பந்தபுள்ளி கோரவும் செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3300/2024/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 602 நாள்.07.11.2024**

**13.** நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்கெட் சதுரங்கடி பகுதியில் இயங்கி வருகிறது. மேற்படி கட்டிடம் 1998-ம் ஆண்டு கட்டப்பட்டதாகும் தற்போது கட்டிடம் 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அங்கங்கே மேல் தளத்தில் பல இடங்களில் விரிசல்களுக்கு கட்டிடம் வலுவிழந்து காணப்படுகிறது. எனவே மேற்படி கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை குறித்து அரசு பொறியியல் கல்லூரி, சேலம் அவர்கள் ஆய்வு செய்து அறிக்கை பெற நடவடிக்கை மேற்கொள்ள அதற்குரிய கட்டணத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3300/2024/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 603 நாள்.07.11.2024**

14.மேட்டூர் நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி நாளிதழ்கள் 2024-2025ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1171/2018/டி1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 604 நாள்.07.11.2024**

15.மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக முதிர்ந்த கொசுக்களை ஒழிப்பதற்காக சிறிய கொசு புகை மருந்து

அடிக்கும் இயந்திரம் புதிதாக நான்கு எண்ணிக்கை வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.552, நாள். 16.07.2024 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 20.09.2024 தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்ற அதன்விவரம்

| வ.எண் | முகவரி | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/S Sri Kaliyamman Trading Corporation . Namakkal | 19712/- |
| 2 | Sri Amman Traders Namakkal | 20400/- |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் M/S Sri Kaliyamman Trading Corporation . Namakkal விலைப்புள்ளிகள் குறைவாக வழங்கியுள்ளதால் மேற்படி நிறுவனத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண். 1986/2024/எச் 1 )**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 605 நாள்.07.11.2024**

16. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசினர் மருத்துவமனை அருகில் அம்மா உணவகம் பொதுமக்கள் பயன்பாட்டில் இயங்கி வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தின் கட்டிடம் கட்டிடம் பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அனுமதிக்கலாம்.
2. செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1666 /2024/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 606 நாள்.07.11.2024**

17. கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024 ஆம் ஆண்டு கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு எண்.18-ல் தூக்கணாம்பட்டி பகுதியில் அறிவுசார் மையம் கட்டமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.195.00/- இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்விடத்தின் எதிரில் அமைந்துள்ள பழுதடைந்த நகராட்சி பணியாளர் குடியிருப்பு (வில்லைவீடுகள்) கட்டிடங்களை தரைமட்டத்திற்கு இடித்து அனைத்து பொருட்கள், இடிபாடுகள் அங்கிருந்து எடுத்துச் சென்று அப்புறப்படுத்தும் பணிக்கு 27.09.2024-ல் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் விவரம் | விலை விகித பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1. | திரு.A.ராமமூர்த்தி,<br>குஞ்சாண்டியூர்,<br>மேட்டூர். | ரூ.24000/- |
| 2. | திரு.M.பழனிசாமி,<br>பொன்னகர்,<br>மேட்டூர். | ரூ.25000/- |

மேற்படி பணிக்கு அதிகபட்ச தொகையான ரூ.25000/-ஐ அளித்துள்ள திரு.M.பழனிசாமி என்பவர் விலைவிகிதம் துறையின் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1666/2023/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 607 நாள்.07.11.2024**

18. 15-வது மத்திய மானிய நிதியின் கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு எண்.28-ல் மாதையன் குட்டை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுகாதார வளாகம் கட்டமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.25.00/- இலட்சத்தில் அனுமதி பெறப்பட்டு பணிமேற்கொள்ளபட்டது.

மேலும் சுகாதார வளாகம் கட்டிடத்திற்கு மேற்கூரை தளம் பூச்சு வேலை மேற்கொள்ளும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.0.43/-இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.3278/2021/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 608 நாள்.07.11.2024**

19. மேட்டூர் நகராட்சி பொது நிதியின் கீழ் KNMT திட்டம் 2024-2025 ஆம் ஆண்டு புதிய நவீன வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு விரிவாக திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.4.00/- இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.431 நாள்.01.11.2023ல் அனுமதி பெறப்பட்டு 18.06.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Terra Amata Design Consortium,<br>S2,Royal court blossom Avenue,<br>Mahindra world city ,<br>Chennai-603002. | மதிப்பீட்டில் 1.50% அதிகம் |
| 2. | M/s.MSquare Architects,<br>Y2, flat no.18,saf games village<br>Koyembedu | மதிப்பீட்டில் 2.25% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2303/2023/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.609 நாள்.07.11.2024**

20. மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான JCB & ஈப்பு ஆகிய இரு வாகனங்களின் வருடந்திர இன்சூரன்ஸ் பிரியமியம் செலுத்திட வேண்டி Untied India Insurance Co.Ltd நிறுவனத்திலிருந்து பெற்றுள்ள பிரிமியம் பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | வண்டி பெயர் மற்றும் எண் | பாலிசி ID எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | JCB TN27S2293 | 1741657460 | 8635.00 |
| 2. | ஈப்பு TN52V4660 | 23216059874 | 11784.00 |

மேற்படி நகராட்சி வாகனங்களின் ஆண்டு இன்சூரன்ஸ் பாலிசி தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து Untied India Insurance Co.Ltd மேட்டூர் அணை என்ற நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1944/2016/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 610 நாள்.07.11.2024**

21. மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான புதிய ஈப்பு கொள்முதல் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வரும் TN93H4749 வாகனத்தின் இரண்டாவது கம்பெனி சர்வீஸ் பணி மேற்கொண்டதற்கு செலவின பட்டியல் தொகை ரூ.10959/–ஐ மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகராம் பெற்றுள்ள M/s.SKS India Pvt Ltd, சேலம் டிலர் நிறுவனத்திற்கு தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கியதனை மன்றத்தின் பதிவிற்க்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் பதிவுசெய்யலாம்.

(ந.க.எண்.1778/2023/இ1)

**பதிவு செய்யப்பட்டது**

**தீர்மான எண். 611 நாள்.07.11.2024**

22. மேட்டூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது சுகாதாரம் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நகராட்சி நிர்வாகம் மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2211/2024/பி1 , நாள் . 10.10.2024குடிநீர் சிக்கனம் , மழைநீர் சேகரிப்பு , மரம் வளர்ப்பு , வெந்நீர் அருந்துவதின் அவசியம் , தூய்மையே சேவை , டெங்கு கொசுக்களினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு , குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரித்து அளித்தல் குறித்து விழிப்புணர்வு ,திறந்தவெளியில் மலம் , ஜலம் கழிப்பு ஒழிப்பு , தனிநபர் கழிவறை அவசியம் குறித்து விழிப்புணர்வு , பிளாஸ்டிக் கேரி பையை ஒழிப்போம் மஞ்சல் பையை கையில் எடுப்போம் ,திடக்கழிவு மேலாண்மை திட்ட விழிப்புணர்வு , வீட்டு மாடி தோட்டம் அமைத்தல் மற்றும் முழு சுகாதாரத் திட்டம் ஆகியவற்றிற்கான பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த மேட்டூர் நகராட்சி பகுதியில் 15.10.2024 அன்று சின்னப்பார்க் (காமத்பூங்கா), மார்கெட் காந்திசிலைமுன்புறம் , தங்கமாபுரிபட்டிணம் புதுப்பாலம் ஆகிய மூன்று இடங்களில் விழிப்புணர்வு நடத்தப்பட்டது அதற்கான தொகை ரூ.15000/– ஐ சிவசக்தி கிராமிய கலைக்குழு திருநங்கை . V. ராணி என்ற பெயரில் வழங்க மன்றத்தின் முன் அனுமதி வேண்டிபார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்

2. இச்செலவினத்தை SBM நிதியிலிருந்துமேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு

(ந.க.எண்.2202/2024/எச்1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.612 நாள்.07.11.2024**

**23.** இந்நகராட்சிக்குச் சொந்தமான சர்க்கார் தோட்டத்தில் உள்ள சாய்ந்த உள்ள தேக்கு மரங்கள் அரசு போக்குவரத்து பணிமனை முன்புறம் உள்ள 8 மரங்கள் மட்டும் வெட்டும் உரிமம், 23.10.2024ல் கோரியதில், கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்ட பொது ஏலத்தை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்தபுள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தபுள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1 | மாது<br>போன்கரடு<br>மாதையன் குட்டை | ரூ.61500 |
| 2 | திரு.செல்வன்<br>போன் கரடு | ரூ.61100 |

**அலுவலக குறிப்பு**

மேற்படி சர்க்கார் தோட்டத்தில் சாய்துள்ள தேக்குமரங்கள் அரசு போக்குவரத்து பணிமனை முன்புறம் உள்ள 8 மரங்கள் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.மாது மாதையன்குட்டை மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக ரூ.61500/-க்கு பொது ஏலம் கோரியுள்ளார். இவ்வினத்திற்கு வனசரக அலுவலர் சேலம் அவர்கள் நிர்ணயம் செய்த தொகை ரூ.60408/- ஆகும். அரசு நிர்ணயம் செய்த தொகையை விட ரூ.1092/- அதிகமாகும். எனவே இவ்பொது ஏலத்தை மன்றம் ஏற்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.613 நாள்.07.11.2024**

**24.**மேட்டூர் நகராட்சி பணியாளர்களின் 2017-2018 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகைக்கான வட்டித்தொகை ரூ.17,12,904/- வழுங்கப்பட வேண்டும். 2017-2018 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகையினை கருவூலத்தில் செலுத்தப்பட்டமைக்கு சேமநலநிதி வட்டி கேட்டு இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டதில் உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.ப.பா.1 / 14617 / 2021, நாள்.22.07.2021 இன்படி 2017-2018 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை வட்டித்தொகை ரூ.4,02,389/- அனுமதிக்கப்பட்டுள்ளது

| வ. எண் | வருடம் | தனிநபர் கணக்கிற்கு வழங்கப்பட வேண்டிய வட்டித்தொகை ரூ. | உள்ளாட்சி நிதிதணிக்கை துறையால் அனுமதிக்கப்பட்ட வட்டித்தொகை ரூ. | வித்தியாச வட்டித்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2017-2018 | 628816 | 118323 | 510493 |
| 2 | 2018-2019 | 607677 | 126768 | 480909 |
| 3 | 2019-2020 | 476411 | 157298 | 319113 |
| | **மொத்தம்** | **1712904** | **402389** | **1310515** |

உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்கள் அனுமதித்த வட்டித்தொகைக்கும், பணியாளர்களின் தனிநபர் கணக்கிற்கு வழங்கப்பட வேண்டிய வட்டித்தொகைக்கும் உள்ள வித்தியாசத்தொகை (ரூ.17,12,904/– – ரூ.4,02,389/–) ரூ.13,10,515/– ஐ பொது நிதியில் இருந்து சேமநலநிதி தொகைக்கு மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

இந்நகராட்சியின் நிதிநிலைமை பற்றாக்குறையின் காரணமாக பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகை உரிய காலங்களில் கருவூலத்தில் செலுத்தப்பட வில்லை. அதனால் சேமநல நிதிக்கு வர வேண்டிய வட்டித்தொகை குறைத்து அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனவே, பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வித்தியாச வட்டித்தொகை ரூ.13,10,515/– ஐ பொது நிதியில் இருந்து சேமநலநிதிக்கு மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.7292/2012/ பி2)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 614 நாள்.07.11.2024**

**25.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5–ல் பொன்னகர் பகுதியில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளி சுற்றுச்சுவர் மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் கல்வெட்டு ஆகியவற்றை பழுது பார்த்தல் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.8.70/–இலட்சத்திற்கு நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2568–1/2023/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.615 நாள்.07.11.2024**

**26.** கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் கீழ் மேட்டூர் நகராட்சி வார்டு எண்.18–ல் தூக்கணாம்பட்டி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அறிவுசார் மையம் கட்டமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.195.00/– இலட்சத்தில் அனுமதி பெறப்பட்டு பணிமேற்கொள்ளபட்டு வருகிறது.

மேலும் அறிவுசார் மையம் கட்டிடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டமைக்கும் பணிக்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.13.50/–இலட்சத்தில் பணிமேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1666/2022/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 616 நாள்.07.11.2024**

**27.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18–ல் தூக்கணாம்பட்டி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–2024 கீழ் அறிவுசார் மையம் ஒரே சீரான கட்டமைப்பு மற்றும் இதர வசதிகள் ஏற்படுதிட ஏதுவாக ஏற்கனவே மாதிரி கட்டட வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு அவ்வாறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி அறிவுசார் மையத்தின் கணினி மற்றும் Interactive Smart Board ஆகியவற்றிக்கு இயக்குவதற்கான Internet Leased Line Connection பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது.

மேற்படி அறிவுசார் மையத்திற்கு தேவையான கணினி மற்றும் Interactive Smart Board ஆகியவற்றிக்கு இயக்குவதற்கான Internet Leased Line Connection Unlimted 50Mbps

Annual Plan(Modem Router+Installation Charges) **செலவினம்** ரூ.2.20/− இலட்லசத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1666−1/2022/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.617 நாள்.07.11.2024**

**28.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18−ல் தூக்கணாம்பட்டி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023−2024 கீழ் அறிவுசார் மையம் ஒரே சீரான கட்டமைப்பு மற்றும் இதர வசதிகள் ஏற்படுதிட ஏதுவாக ஏற்கனவே மாதிரி கட்டட வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு அவ்வாறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி மையங்களுக்கு தேவையான கணினி கொள்முதல் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது.

மேற்படி அறிவுசார் மையத்திற்கு தேவையான 12 எண்ணிக்கை கணினி கொள்முதல் செய்யும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.9.00/−இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினங்களை கல்வி நிதியில் /15th CFC /பொது நிதி இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1666−1/2022/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.618 நாள்.07.11.2024**

**29.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18−ல் தூக்கணாம்பட்டி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023−2024 கீழ் அறிவுசார் மையம் ஒரே சீரான கட்டமைப்பு மற்றும் இதர வசதிகள் ஏற்படுதிட ஏதுவாக ஏற்கனவே மாதிரி கட்டட வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டு அவ்வாறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி மையங்களுக்கு தேவையான Interactive Smart Board அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது.

மேற்படி அறிவுசார் மையத்திற்கு தேவையான Interactive Smart Board பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.12.50/−இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினங்களை பொது நிதி / 15வது நிதிக்குழு மானியம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1666−1/2022/இ1)

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 619 நாள்.07.11.2024**